**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 242/2019 |
| Name | : Rangasamy |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**23.01.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது நரசிங்காபுரத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். 01.03.2018ம் தேதி இரவு 08.30 மணி அளவில் சர்க்கரை மில் பிரிவில் எங்களை பார்க்க வந்த எனது அண்ணனை திரும்ப பஸ் ஏற்றி விட பேருந்து நிறுத்தத்திற்கு சென்றோம் அவர் பார்வை குறைபாடு உள்ளவர். அப்போது எனது அம்மா வள்ளியம்மாள் வெற்றிலை வாங்குவதற்காக சாலையை கடந்து சென்று மீண்டும் திரும்பி வரும் போது மேற்கிலிருந்து வந்த மஞ்சள் நிற Apache வாகனம் எண் ஞாபகம் இல்லை வேகமாக வந்து எனது அம்மா மீது மோதியது. எனது அம்மாவிற்கு கை, கால்கள் உடைந்துவிட்டது. பின் மண்டையில் அடிப்பட்டது மூக்கில் ரத்தம் வந்தது. அந்த வண்டியை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரி தான். அவர் பெயர் சிவராஜ் என்பதை பின்பு தெரிந்து கொண்டேன். எனது அம்மாவை ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேல் சிகிசிச்சைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக நான் ஆம்புலன்ஸ் தேடி வெளியே வந்த போது அவர் மருத்துவமனையில் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் மறு நாள் போலீசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) விபத்து நடந்த போது முக்கிய சாலை என்பதால் போக்கவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சாலையின் தென் புறத்தில் சுமார் 1 பர்லாங் துாரத்தில் எங்கள் வீடு உள்ளது. எனது அண்ணனை ஏற்றி விட வந்த பேருந்து நிறுத்தம் சாலையின் வடக்கு பக்கம் உள்ளது. எனது அண்ணன் பஸ் ஏறி சென்ற பின்பு விபத்து நடந்ததா என்றால் இல்லை அவர் இருந்த போதே நடந்தது. நாங்கள் ரோட்டை கடந்த பேருந்து நிறுத்தம் சென்ற பின்பு சுமார் 5 நிமிடம் கழித்து எனது அம்மா வெற்றிலை வாங்க சென்று சாலையை கடந்தார். எனது அம்மாவிற்கு இறக்கும் போது சுமார் 50 வயது இருக்கும்.

(2) எனது அம்மா சாலையை இருபுறமும் பார்த்து தான் கடந்தார். இருசக்கர வாகனம் வேகமாக வந்தது. எனது அம்மா இருபுறமும் பார்த்து கடந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. புகாரை காவல் நிலையத்தில் கொடுத்தேன். நானும், முருகன் என்பவரும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். புகாரை என்னுடன் வந்த முருகன் என்பவர் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். புகாரில் உள்ள வாசகம் யார் சொன்னார் வழக்கறிஞரை ஒருவரை கேட்டு எழுதினோம். எனக்கு எழுதப் படிக்க தெரியாது. புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த விபத்தானது எனது அம்மாவின் கனவக்குறைவினால் தான் நடந்தது என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.23 17:17:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 242/2019 |
| Name | : Murugan |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**23.01.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நரசிங்காபுரத்தில் வசிக்கிறேன். கூலி தொழில் செய்து வருகிறேன். **01.03.2018** ம் தேதி இரவு **08.45-09.00** மணி அளவில் விபத்து ஏற்பட்டது காயம்பட்டவரை உடுமலை அரசு மருத்துவமனை சென்று பார்த்துவிட்டு வந்தோம். மறு நாள் காலை **08.45** மணி அளவில் சர்க்கரை மில் செல்லும் ரோட்டின் அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் வைத்து போலீசார் விசாரித்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் பார்த்த போது வாகனத்தின் உடைந்த முகப்பு விளக்கு, பெடல் கிழமேல் ரோட்டில் மையப் பகுதிக்கு வடக்கு பக்கம் இருந்தது, தெற்கு பக்கம் நெம்பர் பிளேட்

மற்றும் சிறு, சிறு உடைந்த பாகங்கள் இருந்தது. சாலையின் நடுவில் ரத்தக் கறை இருந்ததா என்றால் ஆமாம். போலீசார் அதை வரைந்து கொண்டிருந்தார்கள். புகைப்படம் எடுத்தார்களா என்றால் ஆமாம். விபத்து சாலையின் நடுவே நடந்ததாக குறித்து எழுதினார்களா என்றால் ஆமாம். இறந்து போன வள்ளியம்மாள் எனக்கு பெரியம்மா முறை. நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு இறந்து போனவர் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.23 17:17:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்